## 14

## குடும்பம் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலம் ...

# குடும்பத்தில் உள்ள அன்பு

## [கலாத்தியர் 5:22, 23]

*எப்படி ஒரு குடும்பம் வெற்றிகரமான கிறிஸ்தவக்குடும்பமாக திகழும்? ஒரு குடும்பத்தை சந்தோஷமான குடும்பம் ஆக்குவதற்குக் கொடுக்கப்பட்ட எல்லா நல்ல ஆலோசனைகளையும் சுருக்கி ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் அந்த வார்த்தை நிச்சயமாக "அன்பு" என்பதாகும். நம்முடைய குடும்பம் வெற்றிகரமாக அமைவதற்கு அன்பினால் கட்டப்பட வேண்டும்!*

*பவுல் கிறிஸ்தவ வாழ்வில் அன்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். - மற்றும் கிறிஸ்தவ குடும்பத்தில் - அவர் ஆவியின் கனியின் குணாதிசயத்தை வரிசைப்படுத்தி கூறும் போது, அவர் "அன்பு" என்பதுடன் துவங்கினார். அவர் இவ்வண்ணமாக எழுதினார், "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" (கலாத்தியர் 5:22, 23).*

*பவுல் அன்பை முதலாவது வரிசைப்படுத்தியதில் ஆச்சரியப்பட வேண்டாம். கிறிஸ்தவ மார்க்கத்தில் அன்பு மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. தேவனுடைய விளக்கவுரையில் அன்பு என்பது சாதாரணமாகக் காணப்படும், ஏனென்றால் "தேவன் அன்பாகவேயிருக்கிறார்" (1 யோவான் 4:8). தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு எல்லாவற்றிற்கும் மேலான அது அன்பினால் சித்தரித்தது (யோவான் 3:16; 1 யோவான் 4:10; ரோமர் 5:8, 9). இரண்டு மிக பிரதானமான கட்டளை தேவனால் கொடுக்கப்பட்டது என்னவென்றால் "தேவனிடத்தில் ... அன்புகூர வேண்டும்" மற்றும் "பிறனிடத்தில் அன்புகூர வேண்டும்" (மத்தேயு 22:37-39). கிறிஸ்துவின் சீஷராகிய நாம், பிரதானமான கட்டளையாக நாம் காத்துக்கொள்ள வேண்டிய கட்டளை கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல "நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டும்" என்பதே (காண்க யோவான் 13:34, 35). 1 கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தின்படி, நம்மிடத்தில் இருப்பவையில் அன்பே எல்லாவற்றிலும் பெரிதான பண்பு அல்லது ஈவு. பவுல் இப்படியாக அந்த அதிகாரத்தை நிறைவு செய்கிறார், இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, "அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது" (1 கொரிந்தியர் 13:13).[1]*

*இன்று அன்பு என்பது பல வகையில் உபயோகப்படுத்தப்படுகிறது. நாம் தேவனை நேசிக்கிறோம், வாழ்க்கைதுணையை நேசிக்கிறோம், பிள்ளைகளை நேசிக்கிறோம், மற்றும் பெற்றோர்களை நேசிக்கிறோம், தேசத்தை நேசிக்கிறோம், அயலகத்தாரை நேசிக்கிறோம், வாழைப் பழத்தை நேசிக்கிறோம், பொருட்கள் வாங்குவதை நேசிக்கிறோம், கால்பந்து விளையாடுவதை நேசிக்கிறோம், மற்றும்*

தொலைக்காட்சி பார்ப்பதை நேசிக்கிறோம் என்று அதே அளவு ஊக்கத்தோடே கூறுகிறோம். நம்முடைய குடும்பத்தை வெற்றியடையச் செய்யும் அன்பு, மற்ற அன்புகளைவிட எவ்வாறு தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது? இந்த பாடத்தில் கலாத்தியர் 5:22, 23ல் கூறப்பட்டுள்ள அன்பைப்பற்றி இரண்டு கேள்விகளுக்கு பதிலளிப்போம்.

## ஆவியின் கனியில் சொல்லப்பட்ட அன்பின் விளக்கம் என்ன?

நமது பாடப்பகுதியில் "அன்பு" என்ற வார்த்தை அகாப்பே என்பதாக இருக்கிறது. தேவன் இந்த வகையான அன்பைதான் நம்மிடம் செலுத்துகிறார் (யோவான் 3:16), அவ்வண்ணமாக நாமும் இந்த வகையான அன்பைதான் தேவனிடமும் மற்றவர்களிடம் செலுத்த வேண்டும் (மத்தேயு 22:37-39). 1 கொரிந்தியர் 13ல் இதே வார்த்தையான அன்பு தான் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் ஒரு கணவன் மனைவியினிடத்தில் செலுத்த வேண்டிய அன்பும் இந்த வகையானது தான் (எபேசியர் 5:25).

இந்த அன்பு என்றால் என்ன? *அகாப்பே* என்பது அடிப்படையில் மனவெழுச்சியாக இருப்பதில்லை, ஏனெனில் இது கட்டளையிடப்பட முடியும் மற்றும் மனவெழுச்சி கட்டளையிடப்படமுடியாதது. மாறாக இது அடிப்படையில் நம்முடைய விருப்பத்தின் செயல்வடிவாக உள்ளது - நம்மால் நேசிக்கப்படுகிற மற்றொரு நபருக்கு திடமாக செய்யப்படுவது. இப்படிப்பட்ட திடமான தீர்மானத்தின் முடிவு சில பழக்கத்தில் நிறைவு பெறுகிறது. வேறு வார்த்தையில் சொல்லப்போனால் *அகாப்பே* என்பது நம்மால் நேசிக்கப்படுபவர்களுக்கு சிறந்த ஒன்றை கொடுக்கும் திடமான தீர்மானமாகும். இப்படிப்பட்ட அன்பே தேவனுக்கு பிரீதியான குடும்பமாக பெருகுவதற்கு உதவும்.

*அகாப்பே* அன்பு என்பது புறம்பான சூழ்நிலைகளை அடிப்படையாக கொண்டது அல்ல - அழகை கொண்டோ, விரும்பத்தக்க தன்மை, நற்குணம் அல்லது அன்பு செலுத்துவதற்கு தகுதியானவர்களைச் சார்ந்தது அல்ல. நாம் முதுமையடைந்த பின்பு, நமது தலை முடியானது வெண்மையாக மாறினாலும் அல்லது தலைமுடி கொட்டிப்போனாலும், நமக்கு ஒரு காலகட்டத்தில் இருந்த அழகான தோற்றம் இழந்து போனாலும், நம்முடைய முகத்தில் சுருக்கங்கள் வந்தாலும், வேதனைகள் சூழ்ந்து கொண்டபோதும், மற்றும் காதல் மறைந்து போனாலும் இந்த அன்பு என்றென்றும் நிலைநிற்கும்.

நாம் நேசிப்பவர்கள் - நம்முடைய துணை, பிள்ளை, அல்லது பெற்றோர்கள் - நேசிக்காதவர்களாய் இருந்தாலும் அந்த நேசம் குறையாது தொடரும். அந்த ஆண் அல்லது பெண் நம்முடைய எதிர்பார்ப்புக் கேற்ப ஜீவிக்கா விட்டாலும் அல்லது ஏதாவது தவறு செய்திருப்பவர்களாயிருந்தாலும் அன்பு செலுத்துவதற்கு தகுதியற்றவர்களாய் இருந்தாலும் *அகாப்பே* அன்பு தொடரும்.

நம்முடைய அன்பைப் பெறுவதற்கு தகுதியில்லாதவர்களிடம் நாம் எப்படி அன்பு செலுத்த முடியும்? ஒரு மனைவி அன்பு நிறைந்தவளாய் இருக்கும் போது, அல்லது கணவன் தன் மனைவிக்கு பரிசு பொருள் கொண்டு வரும் போது அல்லது பிள்ளைகள் கீழ்ப்படிந்து வீட்டின் அறைகளை சுத்தம் செய்து,

ஆராதனைக்கு செல்ல சரியான நேரத்திற்கு தயாராகி இருந்தார்களானால் இப்படிப்பவர்களாகிய நம் குடும்பத்தாரை நேசிப்பது எளிது. அல்லாமலும் குழந்தை இரவு முழுவதும் அழுது கொண்டிருந்து அல்லது ஆறுவயது பிள்ளை தன் தாயின் பிடித்தமான உணவு பாத்திரத்தை உடைத்து அல்லது வீட்டில் இருக்கும் வாலிபன் எதிர்க்கிறவனாயும் இருந்தால், நமது குடும்பத்தாரை நேசிப்பது மிகவும் கடினமான காரியமாக காணப்படுகிறது. குடும்பத்தில் உள்ள மனைவி அல்லது கணவன் எப்பொழுதும் குற்றம் கண்டுபிடிக்கிறவராயிருந்தாலும் அல்லது வேலைஸ்தலத்தில் நல்ல பெயர் எடுப்பதற்காக குடும்பப் பொறுப்புகளை தட்டிக்கழிக்கும்போது அல்லது நம்முடைய வயதான பெற்றோர்கள் இருதயக்கடினமாயிருந்தால் இப்படிப்பட்ட குடும்ப நபர்களை எப்படி அன்பு செலுத்த முடியும்? சிலர் இப்படிக் கூறலாம் "இப்படிப்பட்டதான அன்பு மனிதர்கள் மத்தியில் சாத்தியமில்லை" - ஆனால் அது உண்மைதான்! அல்லாமலும் எவை மனிதனால் சாத்தியம் இல்லையோ அவை தேவனால் சாத்தியமாகும்; ஏனென்றால் நமக்குள் பரிசுத்த ஆவியானவர், வாசம் செய்கிறார், மற்றும் தகுதியில்லாத மனித குலத்திற்கு தேவனுடைய அன்பு மாதிரியாக இருக்கின்றது, அதாவது தகுதி இல்லாதவர்களுக்கு தேவன் அன்பு செலுத்துவது போல நாமும் அன்புகூரலாம். நாமும் அன்பு செலுத்துவதற்கு தகுதி இல்லாதவர்களிடத்தில் அன்பு செலுத்தலாம்.

நாம் அப்படி அன்பு செலுத்துகிற போது நாமும் *அகாப்பே* அன்பை நமது குடும்பத்தில் உள்ளவர்களிடமும் செலுத்தமுடியும், அப்பொழுது நமது குடும்பம் தேவனுக்கும், நமக்கும் பிரியமுள்ளதாயிருக்கும்.

## எப்படி இப்படிப்பட்டதான அன்பு வெற்றிகரமான குடும்பத்தை உருவாக்க முடியும்?

*முதலாவது, அகாப்பே அன்பு வெற்றிகரமான குடும்பத்தை நடத்துவதற்கு வழிநடத்துகிறது, ஏனென்றால் அந்த அன்பு தேவனை நோக்கி இருக்க வேண்டும்.* இயேசு கிறிஸ்து பிரதானமாக கொடுத்த பிரமாணம் என்ன வென்றால் (மத்தேயு 22:37; மாற்கு 12:30; லூக்கா 10:27) தேவனிடத்தில் "அன்புகூர வேண்டும்" (அகாப்பேயின் வினைச்சொல் வடிவம்). குடும்பத்தின் அளவு அல்லது குடும்பத்தின் சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் நாம் இந்த கட்டளைக்குக் கீழ்ப்படியமுடியும். நாம் செய்கிற எல்லா செயல்களிலும் தேவனை முதலாவது வைத்து செயல்பட வேண்டும். நாம் இதை செய்வதற்கு எப்பொழுதும் முயற்சி செய்து அவருடைய சித்தத்தை வீட்டிலும், தொழிலிலும், வேலை அல்லது விளையாட்டு, மற்றும் நம்முடைய தனிப்பட்ட உறவுகளிலும் நிறைவேற்ற வேண்டும். அதனை நாம் அவருக்கு ஆராதனை மற்றும் துதித்த போதும், அவரிடத்தில் ஜெபம் செய்து மற்றும் அவருடைய வார்த்தையை வாசிப்பதிலும் படிப்பதிலும், அவருக்கு விசுவாசமுள்ள பிள்ளைகளாய் ஜீவிக்க வேண்டும். அப்படி நாம் செய்யும் போது நிச்சயமாக நம்முடைய குடும்பம் உறுதியான மற்றும் சந்தோஷமாக அமையும் ஏனென்றால் தேவனை கனப்படுத்துகிற குடும்பமே அல்லாமல் வேறு எந்த குடும்பம் வெற்றிகரமான குடும்பமாய் இருக்க முடியும்.

*இரண்டாவதாக, அகாப்பே அன்பு, வெற்றிகரமான குடும்பத்திற்கு வழிநடத்தும், ஏனென்றால் அது நாம் சுலபமாக வாழக்கூடிய மக்களை*

உருவாக்கும். நாம் 1 கொரிந்தியர் 13:4-8அ, வில் இவ்வாறு வாசிக்கிறோம்.

> அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது.

இப்படிப்பட்டதான குணாதிசயத்தை உடையவர்களுடன் வாழ்வது எளிதாக இருக்காதா என்ன?

மூன்றாவது, அகாப்பே அன்பு வெற்றிகரமான ஒரு குடும்பத்திற்கு வழிநடத்தக் கூடும், ஏனென்றால் இவை குடும்பத்தில் உள்ள நபர்கள் ஒருவரையொருவர் சரியாக நடத்துவதற்கு வழிநடத்தும். குடும்பத்தில் உள்ள நபர்கள் அடிக்கடி ஒருவரையொருவர் "நான் உன்னை நேசிக்கிறேன்" என்று கூறுவது வரவேற்கத்தக்கதாகும்; ஆனால் குடும்ப சூழ்நிலையில் மிக முக்கியமான காரியம் என்னவென்றால் நம்முடைய அன்பை நாம் எவ்வாறு செய்கையின் மூலம் வெளிக்காட்டுகிறோம் என்பதுதான். யோவான் கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தியது போல நாமும் குடும்பத்தில் செய்ய வேண்டும்: "என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்" (1 யோவான் 3:18). அன்பின் குணாதிசயம் 1 கொரிந்தியர் 13:4-8அ அறிவுறுத்துவது என்னவென்றால் நம்மிடத்தில் அன்புகூருபவர்களை அறியமுடியும் ஏனென்றால் அவர்கள் அன்பாக நடந்து கொள்ளுவார்கள்!

நடைமுறையில் சொல்லுவோமானால், அன்பாக நடந்து கொள்ளுகிறார் என்றால் என்ன? அது என்னவென்றால் குடும்பத்தில் உள்ள தாத்தா பாட்டி, பெற்றோர்கள், அல்லது குழந்தைகள் எப்படி நடத்தப்பட விரும்புவார்களோ, அவர்களும் மற்றவர்களை அப்படி நடத்துவார்கள் (மத்தேயு 7:12).

நாம் ஒன்றை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். திருமணம் மற்றும் குடும்ப உறவுகள் என்பது மனித உறவுகளே, மனித உறவுகளை ஆளுகிற எல்லா சட்டங்களும் குடும்பத்திற்கும் பொருந்தும். நான் ஒரு முறை கணவன், மனைவி உறவுகளின் மத்தியில் செய்யவேண்டுவன (do's) மற்றும் தவிர்க்க வேண்டிய (don'ts) பட்டியலை செய்வதற்கு சமயம் செலவழித்தேன். நான் அவர்கள் இடையே மட்டும் பொருந்தும் விதிகளை யோசனை செய்தேன். ஆனால் என்னால் அப்படி செய்ய இயலவில்லை. கணவன் மனைவி இடையில் உள்ள உறவுகளுக்கு தேவையான எல்லா செயல்களும், எந்த உறவையும் தக்க வைத்து கொள்வதற்கும் தேவைப்படுகிறது. திருமணத்திற்கும், குடும்பத்திற்கும் மட்டும் பிரத்தியேகமான சிறப்பு விதிகள் எதுவும் இல்லை. நமக்கு நம்முடைய வாழ்க்கை துணையோடு, நமது பெற்றோர்களோடு அல்லது பிள்ளைகளோடு, நல்லுறவு வைத்துக் கொள்ள வேண்டுமானால், நாம் எப்படி மற்ற எந்த ஒரு நபருடனும் நல்லுறவு வைத்து கொள்ள விரும்பினால் அவர்களை நடத்துவது போன்று அவர்களை கனிவோடும் மற்றும் அக்கறையோடும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

நாம் சற்று இப்படியாக சிந்திப்போம்: நாம் யாரையாவது நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டுமானால் நாம் என்ன செய்வோம்? நாம் நம்முடைய நண்பர்களை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் நாம் என்ன செய்வோம்? எவ்வாறாக நமது நல்ல நண்பர்களை நடத்துவோம்? அந்த செயலையே நாம் நம்முடைய பெற்றோர், நமது வாழ்க்கை துணையோடு மற்றும் பிள்ளைகளோடு செய்வோமானால் நாம் அவர்களோடு அன்பாக நடந்து கொள்ளுவோம்.

இதற்கு மாறாக, எந்த ஒரு நபரும் குடும்பத்தில் தன்னலத்தில் அக்கரை உள்ளவராய், ஒவ்வொருவரும் தன் தன் வழியைப் பார்த்துக் கொண்டு மற்றவர்களுடைய தேவைகளில் கவனம் இல்லாதவர்களாய் காணப்படும் போது அந்த குடும்பத்தில் அன்பில்லாத தன்மை உருவாகிறது. ஒரு நபர் பேசும் பேச்சு கூர்மையாகவும் மற்றும் நேசிக்கப்படாத வார்த்தைகளாக, கேட்கிறவர்கள் உள்ளம் எந்த அளவிற்கு காயப்படும் என்று உணராது பேசும் போது அந்த குடும்பத்தில் அன்பு குறைவுபட்டிருக்கிறது. பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களிடம் அவமரியாதையாக அல்லது கீழ்ப்படிதல் இல்லாதவர்களாய் பேசும் போது அவர்கள் அன்பில்லாதவர்களாக உணரமுடியும். பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை தேவையில்லாமல் திட்டுவதும் அவர்களை உதாசினப்படுத்துவதும், பெற்றோர்கள் *அகாப்பே* அன்பை பிள்ளைகளிடத்தில் காண்பிக்காதவர்களாகிறார்கள். வளர்ந்த பிள்ளைகள் பெற்றோர்களின் நலனில் அக்கரையில்லாதவர்களாய் அவர்கள் தேவைகளை நிராகரித்து தான் அவர்களிடம் அன்பற்றவன் என்பதனை வெளிப்படுத்துகிறார்கள். பெற்றோர்களும் *அகாப்பே* அன்பில்லாதவர்களாய் தங்கள் சுய விருப்பத்தை தங்கள் வளர்ந்த பிள்ளைகளிடத்திலும் பேரப்பிள்ளைகளிடத்திலும் செலுத்துகின்றனர்.

ஆயினும், குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரும் எல்லா விதமான சூழ்நிலைகளிலும் அன்பு செலுத்தி, எல்லோரையும் சரியாக நடத்துவார்களானால் அந்த குடும்பம் பெருகி வளரும். அந்த குடும்பம் சந்தோஷமாகவும், விவாகரத்து இல்லாமல் தொடர்ந்து தேவனுக்கு பிரீதியாயும், கிறிஸ்தவ அன்பை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறதாயும் இருக்கிறது.

*நான்காவது, அகாப்பே அன்பு வெற்றிகரமான குடும்பத்தை உருவாக்குகிறது, ஏனென்றால் அந்த அன்பு அடிப்படையில் ஒரு கடமையாகும்.* தேவன் நம்மிடத்தில் அன்பு வைத்ததினால், அவர் நமக்கு செய்வதெல்லாம் சிறப்பானதாவதற்கு கடமைப்பட்டுள்ளார். நாமும் தேவனிடத்தில் அன்பு செலுத்துவதினால் நாமும் அவருடைய சித்தத்தை கைக்கொள்ளுவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும், அதனால் நாமும் ஒருவருக்கொருவர் கடமைப்பட்டிருக்கிறோம். கணவன் தன் மனைவியினிடத்தில் அன்புகூர வேண்டும் அதனால் அவர் அவளுக்கு கடமைப்பட்டிருப்பதும் உள்அடங்கும். பெற்றோர்கள் பிள்ளைகளிடத்தில் அன்புகூரவேண்டும், அப்படிப்போல பிள்ளைகளும் பெற்றோர்களிடத்தில் அன்புகூரவேண்டும்; வேறுவார்த்தையில் சொல்வோமானால் இவர்கள் ஒருவருக்கொருவர் கடமைப்பட்டிருக்கின்றனர். எல்லா குடும்பமும் - அது பெரிதாக இருந்தாலும் சிறிதாக இருந்தாலும் - இப்படிப்பட்ட அன்பினால் நிறைந்த திடமான நல்லெண்ணம் உடையதாய் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக அன்பின் கடமையுடையதாய் காணப்படவேண்டும். இப்படிப்பட்டதான குடும்பங்கள் வெற்றிகரமானது என்று அழைக்கப்படலாம்.

இந்த பாடமானது தனிநபருக்கும், திருமணமானவர்களுக்கும் பொருந்தும். இருப்பினும் *அகாப்பே* அன்பு என்பது குறிப்பாக கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் விசேஷமான அன்பை வலியுறுத்தும் கடமையாக உள்ளது.

ஒரு புருஷன் மற்றும் ஒரு ஸ்திரீ திருமணம் செய்து கொள்ளும் போது, அவர்கள் ஒருவருக்கொருவர் தங்களை ஒப்புவித்துக் கொள்கின்றனர். திருமணபந்தத்தில் "நான் உன்னை நேசிக்கிறேன்" என்பது "நான் என்னை உனக்கு ஒப்புவிக்கிறேன்; நான் என்னை உனக்குக் கொடுக்கிறேன்" என்று அர்த்தப்படுகிறது மற்றும் அர்த்தப்படவேண்டும். இந்த ஒப்புக் கொடுத்தல் எல்லாவற்றிற்கும் மேலாக திருமணபந்தத்தை ஒன்றாகப் பிடித்திருக்கும்! இந்த வகையான ஒப்புக்கொடுத்தல் இல்லாமையால் தான் அநேக திருமண ரத்துகள் நடந்திருக்கின்றன.

என் மனைவி ஷேர்லாட் மாநில பல்கலைக் கழகத்தில் குடும்பத்தைப்பற்றியதான சமூக அறிவியல் வகுப்பில் கலந்து கொண்டாள். அவளுடைய பேராசிரியர் இப்போதைய நவீன சமுதாயத்தில் குடும்பங்கள் கலைந்து போகிறதைக் குறித்து கலந்துரையாடினார், மற்றும் ஷேர்லாட் ஆச்சரியப்படும் வண்ணமாக, ஒரு குடும்பம் நிலைத்திருக்க வேண்டுமானால் திருமணபந்தத்தில் உள்ள இருவரும் ஒருவருக்கொருவரும் மற்றும் அவர்களுடைய திருமணத்திற்கும் அவசியமானது என்னவென்றால் மிகவும் அதிகமாக ஒப்புக் கொடுத்தலே என்று கூறினார். ஒன்றாக நிலைத்திருக்கும் திருமணங்களைக் காட்டிலும், தோற்றுப்போன திருமணங்கள் இன்னும் அதிகமாக பிரச்சனைகளைக் கொண்டிருக்கவேண்டும் என்பது அவசியமல்ல என்றார் அவர்; மாறாக தோற்றுப்போன திருமணங்களில், குறைந்தபட்சம் ஒரு துணையாவது, நிலைத்திருக்கும் திருமணங்களின் துணைவர்கள் இருவரும் கொண்டிருக்கும் வகையான ஒப்புக் கொடுத்தலில் குறைவுபடுகிறார்கள் என்றார்.

நாம் இந்த கண்ணோட்டத்தை முழுமனதோடு அங்கிகரிக்கலாம். பிரச்சனையான காலங்கள் வரலாம்; உணர்ச்சிகள் சில சமயங்களில் நம்மை ஏமாற்றிவிடும். காதல் என்பது மிகவும் பலவீனமான பூ போன்றது. நாம் அது வாழ்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இப்படி இதற்காக பலமுறை சிறப்பான பிரயாசங்கள் பட்டாலும் அது உதிரலாம். இப்படிப்பட்டதான சூழ்நிலைகளில் திருமண பந்தத்தை எவை தாங்குகிறது? *அகப்பே* அன்பை அடிப்படையாகக் கொண்ட நாம் எடுத்துக்கொண்ட உறுதிமொழி மாத்திரமே. நாம் தேவனுடைய வார்த்தையை மதிப்பதற்கு தேவன் நம்மை வழி நடத்தும்படி அனுமதிக்க வேண்டும். ஒவ்வொரு கணவனும் தன் மனைவிக்கு அப்படியே ஒவ்வொரு மனைவியும் தன் கணவனுக்கு இந்த ஒப்புக்கொடுத்தல் என்பது கணவன் மற்றும் மனைவி இருவரையும் நம்பிக்கையுள்ளவர்களாயும் ஒன்றாக நிலைத்திருக்கிறவர்களாயும் ஆக்கும்.

## முடிவுரை

இந்தப் பாடங்களில், கிறிஸ்தவர்களாலான குடும்பமானது, கலாத்தியர் 5:22, 23ல் பேசப்பட்ட ஆவியின் கனிகளைக் கொடுப்பார்கள் என்பதே அடிப்படை முகவுரையாக இருக்கிறது. ஒரு வெற்றிகரமான குடும்பத்தை ஆக்குவது அதுவே.

பவுல் ஆவியின் கனிகளை வரிசைப்படுத்தும் போது "அன்பை" முதலாவதாக வரிசைப்படுத்தியது யதேர்ச்சியானதாக இருக்க முடியாது. சந்தேகமே இல்லை, 1 கொரிந்தியர் 13ல் குறிப்பிட்டது போல் பவுல் அன்பு மிக முக்கியமான நற்குணம் என்று சிந்தித்து இருக்க வேண்டும். மேலும் அவர் முதலாவது வரிசைபடுத்தி இருப்பதற்கு மற்றோரு காரணமும் இருக்கலாம். அவர் அன்பை உணர்வாற்றல் சார்ந்த நற்குணம் என்று கண்டார் (1 கொரிந்தியர் 13:4-8அ); மேலும் அவர் கலாத்தியர் 5:22, 23ல் நற்குணத்தை வரிசைப்படுத்தும் போது அன்பை முதலாவது வைத்தார். ஏனென்றால் அன்பு என்பது கீழ்வரும் பண்புகளை உள்ளடக்கியது. சான்றாக, எவர் அன்புகூருகிறாறோ அவரிடம் பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம் மற்றும் இச்சையடக்கம் இருக்கும். மேலும் "அன்பு" என்பதை ஒரு மையக்கருத்தாக பார்க்க முடியும் அல்லது கீழ்வருபவைகளுக்கு தலைப்பாக இருக்கலாம். மேலும் பவுல் இப்படியாக சில காரியத்தை சொல்லுகிறார்: "ஆவியின் கனி என்பது அன்பு - சந்தோஷம், மற்றும் சமாதானம், மற்றும் பொறுமை, மற்றும் தயவு, மற்றும் நற்குணம் மற்றும் விசுவாசம் மற்றும் சாந்தம் மற்றும் இச்சையடக்கம் இவற்றில் வெளிப்படுகிறது."

எவர் ஒருவரும் அன்பு இல்லாமல் வெற்றிகரமாக கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது. அதுவுமல்ல, அன்பு இல்லாமல் கிறிஸ்தவ குடும்பம் வெற்றி பெறுவது சிந்தித்துக்கூட பார்க்க முடியாதது ஆகும்.

உங்கள் குடும்பம் அன்பினால் சிறப்பிக்கப்பட வேண்டும். நீங்கள் நிச்சயப்படுத்த வேண்டியது, உங்கள் குடும்பத்தில், நீங்கள் தேவனை உங்கள் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும், மற்றும் பெலத்தோடும் அன்புகூரவேண்டும். இரண்டிலும் அதாவது வீட்டிலும் மற்றும் வெளியிலும், உன்னை நேசிப்பது போல பிறனையும் நேசிப்பது உறுதியாயிருக்க வேண்டும். அன்பினால் உங்கள் குடும்பம் சிறப்பிக்கப்பட்டு கட்டப்படவேண்டுமானால் உங்கள் வாழ்க்கை துணைக்கு நீங்கள் ஒப்புவிக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் - அதனால் வளமான வாழ்விலும் மற்றும் இடுக்கண்ணிலும், நீங்கள் அவர்களுக்கு எப்பொழுதும் சிறந்தவற்றை செய்கிறீர்கள். பின்பு நீங்கள் சந்தோஷமாகவும், திருப்திகரமான குடும்பமாகவும் வாழலாம். இதுவே தேவனுக்கு பிரீதியாயும் மனித குலத்திற்கு ஆசீர்வாதமாயும் இருக்கும்.

நீங்கள் அன்புகூர வேண்டிய பிரகாரம் உண்மையாக அன்புகூருவதற்கு முன்பாக, நீங்கள் உங்களைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். அவரில் இருப்பவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருப்பதால், அவர்கள் ஆவியின் கனியைக் கொடுக்க முடியும்.

---

குறிப்பு

[1]மற்ற வசனங்களில், 1 கொரிந்தியர் 13ஐப் போலவே, விரும்பப்படத்தக்க மற்ற ஆவிக்குரிய பண்புகளுடன் பட்டியலிடப்பட்டிருக்கும்போது, அன்பு என்பது முக்கியமான இடத்தில், பட்டியலின் துவக்கத்தில் (கலாத்தியர் 5:22, 23ல் இருப்பது போல) அல்லது முடிவில் (2 பேதுரு 1:5-7; கொலொசெயர் 3:12-14) பட்டியலிடப்பட்டுள்ளது.